# இலங்கை அரசாட்சி "கெஸெற்" பத்திரிகை.

அரசாட்சியாரின் அனுமதிப்படி பிரசுரிக்கப்பட்டது.

இல. 7,152 — 1921 ம் ௵ தைமீ 7 ந் திகதி வெள்ளிக்கிழமை.


## Part IV. — நான்காம் பாகம்.

---

### அரசாட்சியாரின் விளம்பரம்.

---

1892 ம் ஆண்டின் 18 ம் இலக்கக் கட்டளைச்சட்டத்தின் 9E (2) (*f*) ம் பிரிவின்படி கொழும்பு டிஸ்திறிக் சுகாதார சங்கத்தால் இயற்றப்பட்டு 1917 ம் ஆண்டு ஒகஸ்டுமாதம் 17 ந் திகதியில் 6,893 ம் கசற்பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட "அபாயமானவும் தீங்குள்ளவும் தொழில்கள்" என்னும் பிரிவின்கீழ் 1 ம் துணைப்பிரமாணத்துக்கும் அதற்கு அணைத்திருக்கும் அட்டவணைக்கும், சொல்லப்பட்ட கட்டளைச்சட்டத்தின் 9E (2) ம் பிரிவின் ஏற்பாடுகளின்படி அதிகாரமந்திர சபையாரின் ஆலோசனையோடு உத்தம தேசாதிபதியவர்களால் அனுமதிக்கப்பட்டு சொல்லப்பட்ட சங்கத்தாரால் செய்யப்பட்ட திருத்தம்.

மேற்சொல்லப்பட்ட 1 ம் துணைப்பிரமாணத்தில் காட்டிஇருக்கும் அபாயமானவும் தீங்குள்ளவும் தொழில்களின் விபரத்தில் "யந்திர உதவியால் தேங்காய் எண்ணெ சரிக்கட்டுதல்" என்பது "யந்திர உதவியால் தேங்காய் எண்ணெ சரிக்கட்டுதல் அல்லது தேங்காய் பூ திருவுதல் அல்லது இரண்டுஞ்செய்தல்" என்று மாற்றப்படவேண்டும்.

மேற்சொல்லப்பட்ட அட்டவணையிலிருக்கும் "யந்திர உதவியால் தேங்காய் எண்ணெ சரிக்கட்டுதல்" என்னும் சொற்களை "யந்திரஉதவியால் தேங்காய் எண்ணெ சரிக்கட்டுதல் அல்லது தேங்காய்ப் பூ திருவுதல் அல்லது இரண்டுஞ் செய்தல் என்று மாற்றுதல் வேண்டும்.

உத்தமனுர் கட்டளைப்படி,

கலோனியல் சக்கிறுத்தார் கந்தோர்,
கொழும்பு 1920 ம் ௵ மார்கழிமீ 21 ந் ௳.

———

கிறீம் தொம்சன்,
கலோனியல் சக்கிறுத்தார்.

### திருத்தப்பட்ட உபகட்டளை.

செயற்கையான பயளைசேரித்தல் அல்லது ஆக்குதல் இரத்தம் அல்லது எஞ்சியவை யுவித்தல்; இரத்தத்தை அல்லது எஞ்சியவையை உலர்த்தல், தோல் பதனிடுதல், கொழுப்புருக்குதல், கொழுப்பு வடித்தல் சவர்க்காரம் செய்தல், தென்னைமட்டை ஊறவைத்தல், தும்புக்குச் சாயம்தோய்த்தல், (இயந்திர உதவியால்) தேங்காய் எண்ணெவடித்தல் அல்லது தேங்காய்ப்பூ திருவுதல் அல்லது இரண்டும்செய்தல், தும்பு சேகரித்தல் அல்லது ஆக்குதல், தோல் எலும்பு, செயற்கையான பயளை அல்லது செயற்கையான பயளையாக்குவதற்கு வேண்டிய பொருட்கள் சேகரித்தல், 5 அந்தர் நிறைக்கு மேற்பட்ட மாசு (மாலைதீவு மச்சம்) சேகரித்துவைத்தல், கருங்கல், கபுக் என்னும் கூழாங்கல், கிறவல் என்னும் போளாங்கல் எடுப்பதற்கு நிலங்கிண்டுதல், செங்கல்லு, ஓடு செய்தல், சுண்ணும்பு நீற்றுதல், சோடா லெமனேற் செய்தல், மின்னரம் நீற்றல் அல்லது சேகரித்துவைத்தல்.

## அரசாட்சியாரின் தேவைக்காகிய காணி விளம்பரங்கள்.

1911 ம் ௵-த்து 10 ம் இலக்கச்சட்டத்தின் 3 ம் பிரிவின் பிரகாரம் திருத்தப்பட்ட 1876 ம் ௵-த்து 3 ம் இலக்கச்சட்டத்தின் 6 ம் பிரிவின் பிரகாரம் மந்திர ஆலோசனைச்சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கொடுத்த கட்டளையின்படி பின்னுல்ச்சொல்லிய காணியை அரசாட்சியார் ஒரு பிரசித்த பாவனைக்கு அதாவது கோற்றை றேட்டில் ஒரு பிரசித்த கக்கூசு கட்டுவதற்காக ஆட்சிஒப்புக்கொள்ள எண்ணியிருக்கிறது, காணியின் விபரம் :—

பிரதமபடத்து இல. 7,069. குறிச்சி—கொழும்பைச்சேர்ந்த போறளையில்.

| துண்டு. | காணியினது பெயர். | விபரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. ரூ. ப. |
|---|---|---|---|---|
| 1 | கார்டுஎன்று அழைக்கப்படுவது .. | 35 வருஷம் வயதுள்ள 2 தென்னமரமும் ஒரு பருத்திமரமும் இருக்குது | சேர் எச். ஸீ. ஒபய சேகரா | 0 0 2·32 |

சொல்லிய காணியை அரசாட்சியார் தங்கள் பாவனைக்கு ஆட்சி ஒப்புக்கொள்ள எண்ணியிருக்கிறுர் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன். மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவர்அவர் காரியகாரர் மூலமாய் 1921 ம் ஆண்டு மாசி மாதம் 10 ம் திகதியிலன்று பகல் ஒரு மணிக்கு கொழும்பு நகரசங்கக் கந்தோரில் என்முன்பாக வெளிப்பட்டு இக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காகத் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விபரங்களையும் சொல்லும்படி அவர்களிடத்திற் கேட்கப்படுகின்றன.

நகரசங்கக் கந்தோர்,
கொழும்பு, 1920 ம் ௵ மார்கழிமீ 20 ௳.

பீ. ஜீ. ட கிளன்வில்லே,
நகரசங்க அக்கிராசனரும், கொழும்பு மேயரும்.

---

1876 ம் ௵-த்து 3 ம் இலக்கச்சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் கொட்டியாகலையில் கூலி லாயங்களுக்காக என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச்சொல்லப்படும் காணியை, அஃதாவது :—

பிரதமபடத்து இல. 7,115. குறிச்சி—கொட்டியாகலையில் வொகவந்தலாவை சுகாதாரசங்க எல்லைகட்குள்.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயம். | விசாலம், ஏ. ரூ. ப. |
|---|---|---|---|---|
| 1 | கொட்டியாகலைத்தோட்டம் .. | பத்தன .. | மேஸர் ஜெனரல் சேர் சீ. எவ். காட்டெனும் மெஸ் எவ்காட்டெனும் | 0 0 32·6 |

எடுத்துக் கொள்வதற்கான எத்தனஞ் செய்யும்படி 1876 ம் ௵-த்துக் காணி எடுத்துக் கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனை செய்திருப்பதனுல், அக்காணியை ஆட்சி ஒப்புககொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறுர் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைகொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1921 ம் ௵ பெபிரவரி மாசம் 7 ௳ தேதியிலன்று பிற்பகல் 2 மணிக்கு கொட்டியாகலையில் றெஸ்ற் கௌசில் என்முன்பாக வெளிப்பட்டு தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனுல் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கண்டிக் கச்சேரி,
1921 ம் ௵ ஜெனவரிமீ 7 ௳.

டபிள்யு. எல். கின்டேர்ஸ்லி,
அரசாட்சி ஏசண்டு.

---

1876 ம் ௵-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் பிரசித்த மலசலம் களிக்குமிடம் கட்டுவது என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை, அஃதாவது:—

பிரதமபடத்து இலக்கம் 11,507. குறிச்சி—டேவத்தை.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. ரூ. ப. |
|---|---|---|---|---|
| 1 | நாவடகேவத்தை .. | தென்னந்தோட்டம் .. | 1, சபேர்சாய்பு, அப்டுமசலைது, 2 குஞ்சி வாவா அப்டுல்றகுமான் கட்டுக்கொன | 0 0 15·6 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ் செய்யும்படி 1876 ம் ௵-த்துக காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனுல் அக்காணியை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறுர் என்பதை 7 ம் பிரிவின் படி வேண்டிய பிரகாரம் நான் இதனைகொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1921 ம் ௵ ஜனவரிமாசம் 29 ௳ தேதியிலன்று 2 மணிக்கு காலி கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுககாய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனுல் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

காலிக் கச்சேரி,
1920 ம் ௵ டிசம்பர்மீ 23 ௳.

ஆர். பீ. ஹெலிங்ஸ்,
அரசாட்சி ஏசண்டு, தென்மாகாணம்.

1876 ம் ஹூ-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் கெமிங்வோட் தோட்ட ரோட்டின் 1 ம் கட்டையில் கற்பாறை சுரங்கம் என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை அஃதாவது :—

பிரதமபடத்து இல. 2,917. குறிச்சி—பத்பேரிய.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. ரூ. ப. |
|---|---|---|---|---|
| 1 | பலமடுகல்லகேன அல்லது டீ ஜொங் குறுப் | தோட்டம் .. | மேஸ்தா எம். ஜே. டி ஜொங் .. | 0 0 30·40 |
| 2 | ஷை .. | சேனை .. | ஷை .. .. | 1 0 24·50 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஹூ-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால், அக்காணிகளை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1921 ம் ஹூ மாசி மாசம் 4 ந தேதியிலன்று பின்னேரம் $1\frac{1}{2}$ மணிக்கு றுவன்வலை குறிச்சி நீதிவிசாரணை மண்டபத்தில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளினுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கேகாலைக் கச்சேரி,
1921 ம் ஹூ தைமீ 5 ந உ.

ஏ. டபிள்யு. சேமூர்,
உதவி அரசாட்சி ஏசண்டு.

---

1876 ம் ஹூ-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் அவிசாவலை கினிகத்தேனை ரோட்டு 42 ம் கட்டையில் பாலம் திருப்பிக் கட்டுகிறதற்கும் நேர்ரோட்டு விடுவதும் என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை, அஃதாவது :—

பிரதமபடத்து இல. 3,007. குறிச்சி—கோமதுாவ.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. ரூ. ப. |
|---|---|---|---|---|
| 1 | கிருலியத்தேதெனியா .. | தேனியா .. | பி. றி. அப்புகாமி, டிங்கிரிபண்டா, றன்மெனிக்கா, பீற்றர்பண்டா, டிங்கிரிமெனிக்கா | 0 0 9·2 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஹூ-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனைக்குக் கற்பனைசெய்திருப்பதனால், அக்காணியை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டியபிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரா மூலமாய் 1921 ம் ஹூ மாசி மாசம் 4 ந தேதியிலன்று பின்னேரம் $1\frac{1}{2}$ மணிக்கு றுவன்வலை குறிசசி நீதிவிசாரணை மண்டபத்தில் என்முருவை தானயத்தில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமககு அககாணியினுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுககாய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுககொள்ளப்படுகின்றது.

கேகாலைக் கச்சேரி,
1921 ம் ஹூ தைமீ 5 ந உ.

ஏ. டபிள்யு. சேமூர்,
உதவி அரசாட்சி ஏஜண்டு.

---

1876 ம் ஹூ-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் தெய்யோபிட்டி கற்கூசு கட்டுவது என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை அஃதாவது :—

பிரதம படத்து இல. 3,017. குறிச்சி—தெய்யோபிட்டி.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. ரூ. ப. |
|---|---|---|---|---|
| 1 | உறுப்பெலாவே தெய்யோபிட்டி வத்தை | தென்னந்தோட்டம் .. | யூ. ஷீ. பீற்றர்சின்ஞோ, எ. எ. தாபுறு, எம். கே. சிறிவர்த்தனகாமி | 0 0 26·5 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ் செய்யும்படி 1876 ம் ஹூ-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதி யவர்கள் எனக்குக் கற்பனை செய்திருப்பதனால் அக்காணியை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1921 ம் ஹூ மாசி மாசம் 5 ந தேதியிலன்று காலமே 10 மணிக்கு தெய்யோபிட்டி குறிச்சி நீதி விசாரணை மண்டபத்தில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியினுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கேகாலை கச்சேரி,
1921 ம் ஹூ தைமீ 5 ந உ.

ஏ. டபிள்யு. சேமூர்,
உதவி அரசாட்சி ஏசண்டு.

1876 ம் ஆண்டு-த்து 3 ம் இலக்கச்சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் புத்தளம் புகையிரத பாதை போடுகிறதற்காக என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது :—

பிரதமபடத்து இல. 4,950. குறிச்சி—குருவிக்குளம்.

| துண்டு. | காணியினது பெயர் | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. | று. | ப. |
|---|---|---|---|---|---|---|
| 1 | கொக்குமடுதோட்டம் .. | 25-30 வயது தென்னை 11 நிற்கும் தோட்டம் | சி. மீராசாய்வுமரைக்கார் .. | 0 | 1 | 8·6 |
| 2 | கொக்குமடுகாணி .. | காடு .. .. | ஷை .. | 2 | 1 | 3·5 |
| | | குறிச்சி—பச்சைக்காட்டுமுந்தல். | | | | |
| 3 | ஷை .. | காடு .. .. | எஸ். பீ. சுவக்கீனு .. | 1 | 3 | 14·1 |
| 4 | ஷை .. | வெண்காணி .. .. | முடி .. .. | 1 | 1 | 9·8 |
| 5 | கொக்குமடு .. | தண்ணீர்பிடி .. .. | முடி .. .. | 0 | 2 | 2·1 |
| 6 | கொக்குமடுகாணி .. | காடு .. .. | முடி .. .. | 0 | 3 | 11·4 |
| 7 | பச்சக்காட்டு முந்தல் தோட்டம் | 25-30 வயது தென்னை 14 நிற்கும் தோட்டம் | ஜேசாயிரோ தொஸ்தர் துரை .. | 0<br>0 | 3<br>3 | 20·6<br>20·6 |
| 8 | ஷை .. | 3-4 வயது தென்னை 50 நிற்கும் தோட்டம் .. | ஊ. கெ. செய்யுது முகம்மது | 0 | 3 | 18·8 |
| | | குறிச்சி—கொம்பிமுனை. | | | | |
| 9 | கொம்பிமுனைகாடு .. | காடு .. .. .. | இ. செ. மு முகம்மது காசிம் மரைக்கார் | 1 | 2 | 8·5 |
| 10 | ஷை .. | காடு .. .. .. | முடி .. | 0 | 1 | 14·2 |
| 11 | ஷை .. | காடு .. .. .. | முடி .. .. | 0 | 0 | 10·1 |
| 12 | ஷை .. | காடு .. .. .. | முடி .. .. | 3 | 2 | 16·1 |
| 13 | கொம்பிமுனைதர்வை காணி | வெண்காணி .. .. | முடி .. .. | 5 | 1 | 12·3 |
| 14 | ஷை .. | ஷை .. .. | இ. செ. மு. முகம்மது காசிம் மரைக்கார் | 1 | 1 | 1·2 |
| | | | | 20 | 3 | 31·3 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஆண்டு-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால், அக்காணிகளை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியக்காரர் மூலமாய் 1921 ம் ஆண்டு தைமாதம் 31 ந் தேதியிலன்று காலை 10 மணிக்கு புத்தளங் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அககாணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

வதுளைக் கச்சேரி,
1920 ம் ஆண்டு மார்கழிமீ 21 ந் உ.

டப்ளியு. கே. எச். கெம்பல்,
உதவி அரசாட்சி ஏசண்டு.

---

## கேள்விப்பத்திரங்களைப்பற்றிய அறிவித்தல.

புத்தளம் வட உப்புமாவிலுள்ள 22 ம் துவக்கம் 26 ம் வரையுமுள்ள உப்புகுதங்களை திருப்பி அடைக்கும் வேலை யொப்பந்தத்திற் கொடுக்கப்படும்.

2. இவ்வொப்பந்தத்தைக் கேட்க விரும்புபவர் தங்கள் கேள்விப்பத்திரங்களை "முத்திரித்த உறைகளிலிட்டு "புத்தளம் வட உப்புமாவிலுள்ள 22 ம் துவக்கம் 26 ம் வரையுமுளள உப்புக்குதங்களை திருப்பி அடைக்கும் ஒப்பந்தக் கேள்வி" யென்றெழுதிப் புத்தளம் உதவி யேசண்ட்வர்கட்கு 1921 ம் ஆண்டு தைமாதம் 19 ந் தேதி 1 மணிக்கு முந்திக கிடைக்கத்தக்கதாக அனுப்பவேண்டும்.

3. கேள்விக்காறன் தனது கேள்விப்பத்திரத்தை யனுப்பமுந்தி யெந்தக் கச்சேரியிலாவது ஒரு கச்சேரியில் முற்பணமாகப் பத்து ரூபாய் கட்டிப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டைக் கேள்விப்பத்திரத்தோடிணைக்கவேண்டும்.

4. கேள்வி யேற்றுக்கொள்ளப்பட்டால் அப்படிக் கேள்வி யேற்றுக்கொள்ளப்பட்ட கேள்விக்காறன் தான் குறித்த வேலையைக் குறித்த காலத்துட் கிரமமாக முடித்துப்போடுவதாய் ஞாயமான காலத்துள் உதவி யேசண்டருடன் ஓர் உடன்படிக்கை பண்ணிக்கொள்ள வேண்டும். அப்படியுடன்படிக்கை பண்ணிக்கொள்ளத் தவறுகில் கேள்விக்காறன் தான் கட்டிய முற்பணத்தை யிழந்துவிடுவார்.

5. கேள்விக்காரன் தனக்குக் காயிதங்கள் கிடைக்கத்தக்கதாகப் புத்தளத்தில் ஓர் விலாசத்தைக் குறிக்கவேண்டும்.

6. உடன்படிக்கை பண்ணிக்கொண்டதின்பின் நாலுகிழமைக்குள் வேலையை முடித்துப்போட வேண்டும்.

7. இன்னும் வேண்டிய விபரங்களைப் புத்தளம் உப்புத்துரை யவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

### செய்யவேண்டிய வேலையின் விபரம்.

தற்போது குதங்களில் உழுத்துப் பழுதாயும் போயிருக்கிற மரந்தடி கிடுகு முதலியவற்றை யெல்லாம் எடுத்துப்போட்டு புதுக் கிடுகு முதலியவற்றைப் போடவேண்டும்.

குதங்களின் கூரையைப் பிரித்து வேண்டியவிடங்களில் பழுதுபார்த்துப் புதுக் கிடுகினால் வேய்ந்து அதற்கு மேற்பாரமாகப் பூட்டுகளை வைக்கவேண்டும்.

எஸ். எம். பி. வேந்தர்கோன்,
உதவி ஏசன்றுத்துரைக்காக.

புத்தளங் கச்சேரி,
1920 ம் ஆண்டு மார்கழிமீ 23 ந் உ.

H. R. COTTLE, GOVERNMENT PRINTER, COLOMBO, CEYLON.